# மனிதநேய அடிப்படையில் பொலிஸாரை புலிகள் விடுவித்தனர் சே.சங்கம்

ஜூன் மாதம் 1990 லிருந்து விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலிருந்த பொலிஸ் ஒருவரை விடுதலைப் புலிகள் மனிதநேய அடிப்படையில் எம்மிடம் நேற்று 14 ஆம் திகதி நண்பகல் ஒப்படைத்தார்கள் என்று நேற்றுமாலை சமகாலத்தில் யாழ்நகரிலும், கொழும்பிலும் வெளியிடப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். இளைப பொறுப்பாளர் திரு. பிறட் ஜனவரி 10 ஆம் திகதி விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலிருந்த 43 பொலிசாரையும் பார்வையிட்டபின் வைத்திய காரணங்களைக் காட்டி நோயுற்றிருந்த பொலிசாரை மனிதநேய அடிப்படையில் விடுதலை செய்யும்படி விடுதலைப் புலிகளைக் கேட்டிருந்ததாக அந்தச் செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது. வேண்டுகோளை ஏற்றுநேற்று விடுதலைப் புலிகள் நோய்வாய்ப்பட்டிருந்த பொலி

(4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள் 04

விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (15 - 01 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 331

## "தேவைப்படின் திரும்பவும் மண்மீட்பு நிதி அளிப்பேன்"

(நல்லூர்)

தமிழீழ மீட்புநிதிக்கு ஆறுபவுண் கொடுத்துதவியகோண்டாவிலைச் சேர்ந்த சண்முகம் பாஞ்சோதி நேற்று பொதிகளின்று ஆறு பவுண்களையும் மீளவும் பெற்றுக் கொண்டார். தேவைப்படும்போது தான் மீளவும் பவுணை மீட்பு நிதிக்குக் கொடுத்துதவ இருப்பதாக அவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். தனது இரண்டுபவுண்களுக்குப்பதிலாக இரண்டு பவுண் எடை கொண்ட பவுண்காசு ஒன்றை மீளப் பெற்றுக்கொண்

(4 ஆம் பக்கம் பார்க்க

# பிரபாகரன் முன்வந்து! ஆயுதம் ஒப்படைத்தாலே பேச்சு!

## கல்வெட்டையில் ஒரு தமிழர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினர் மட்டக்களப்பு மாவட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

"விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தானாக முன்வந்து ஆயுதங்களை ஒப்படைக்கும் வரை அவர்களுடன் பேச்சுவார்த்தை எதையும் நடத்தப் போவதில்லை" என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளதாக ஏஜென்சிச் செய்தி ஒன்று நேற்றுமாலை தெரிவித்தது.

அதேவேளை கடந்தவாரம் யுத்தநிறுத்தத்தைக் கைவிடப் போவதாக அறிவித்து சிறிலங்கா ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் பேச்சுவார்த்தை நடத்துவதானால் அதில் தலைவர் பிரபாகரன் கலந்து கொள்ளவேண்டும் எனத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

## உயிரிலும் மேலாக உங்கள்மீது நம்பிக்கை வைத்துள்ளோம்

(கொழும்பு) — பிரேமதாசா

நாங்கள் உங்கள் தோள் வலிமையையே நம்பியிருக்கிறேன். நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக எங்களின் உயிரிலும் மேலாக உங்கள்மீது நம்பிக்கை வைத்திருக்கின் ...கையின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மரபுரிமையைப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாச கொத்தலாவலைப் பாதுகாப்பு

## இரு ராணுவம்பலி

விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டவேளையில் கரடியனாற்றில் இரு இராணுவத்தினர் நீரில் மூழ்கி மரணமானதாகப் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் அச்செய்தியில் கட

## எம்மனிதநேய நடவடிக்கையை சிறிலங்கா புரிவதாக இல்லை

— ராஜன்

(யாழ்ப்பாணம்)

நாங்கள் சிறிலங்கா மக்களுக்கு என்றும் எமது மனிதநேயத்தை வெளிப்படுத்தி வருகிறோம். ஆனால், அந்தப் பேரினவாத சிறிலங்கா அரசாங்கம் புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. ராஜன் யுத்தக் கைதியான பொலிஸ் நாமரட்ணாவை விடுதலைசெய்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்த சமயம் ஈழநாதம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சு நடத்துமாறு தொண்டமான் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை இலங்கைத் தொழிலாளர் காங்கி

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் தமிழீழ விடுதலைப்

# பிரபாகரன் முன்வந்து ஆயுதம்

# ஒப்படைத்தாலே பேச்சு!

## சிறிலங்கா ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

''விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தானாக முன்வந்து ஆயுதங்களை ஒப்படைக்கும் வரை அவர்களுடன் பேச்சுவார்த்தை எதையும் நடத்தப் போவதில்லை'' என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளதாக ஏஜென்சிச் செய்தி ஒன்று நேற்றுமாலை தெரிவித்தது.

அதேவேளை கடந்தவாரம் யுத்தநிறுத்தத்தைக் கைவிடப் போவதாக அறிவித்து சிறிலங்கா ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் பேச்சுவார்த்தை நடத்துவதானால் அதில் தலைவர் பிரபாகரன் கலந்துகொள்ளவேண்டும் எனத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

## உயிரிலும் மேலாக உங்கள்மீது நம்பிக்கை வைத்துள்ளோம்

— பிரேமதாசா

(கொழும்பு)

நாங்கள் உங்கள் தோள் வலிமையையே நம்பியிருக்கிறோம். நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக எங்களின் உயிரிலும் மேலாக உங்கள்மீது நம்பிக்கை வைத்திருக்கின்றோம். நீங்கள் தான் இலங்கையின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மரபுரிமையைப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாச, கொத்தலாவலைப் பாதுகாப்புக் (4ஆம் பக்கம் பார்க்க)

## இரு ராணுவம்பலி

விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டவேளையில் அரடியனாற்றில் இரு இராணுவத்தினர் நீரில் மூழ்கி மரணமான சகப் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் அச்செய்தியில் கடந்த மூன்று நாட்களில் நான்கு இராணுவத்தினர் இறந்ததாகவும் குறிப்பிட்டது.

## பொங்கல்தின போர் நிறுத்தத்தை ஊர்காவற்றுறை படை மீறியது

(ஊர்காவற்றுறை)

தைப்பொங்கல் தினமான நேற்று சிறிலங்கா அரசு அறிவித்த போர் நிறுத்தத்தை சிறிலங்கா இராணுவத்தினர் மீறியுள்ளனர்.

நேற்று காலை 11.30 மணியளவில் ஊர்காவற்றுறை சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து சின்ன மூளாய்ப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் காவல் நிலைகளை நோக்கி ஒரு கவசவாகனம், இரண்டு டிறக்போன்ற கனரக வாகனங்கள் சகிதம் (4ஆம் பக்கம் பார்க்க)

## முனைக்காட்டில் 34 தமிழர் அதிரடிப்படையால் கைது

(அம்பாறை)

சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் அம்பாறை மாவட்டத்திலுள்ள முனைக்காடு என்னுமிடத்தைச் சுற்றிவளைத்து முப்பத்து நான்கு ஆண்களைக் கைதுசெய்துள்ளனர்.

நேற்று முன்தினம் திருக்கோயில் இராணுவ முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினர் முனைக்காட்டுப் பகுதியைச் சுற்றிவளைத்து முப்பத்துநான்கு ஆண்களைக் கைது செய்து முகாமிற்குக் கொண்டுசென்றனர், இவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது இவர்களின் உறவினர்கள் அச்சமடைந்துள்ளனர். (மு)

## சாந்தனின் இசை நிகழ்ச்சி

''இந்தமண் எங்களின் சொந்தமண்'' புகழ் சாந்தனின் இசை நிகழ்ச்சி யாழ். நகரில் நடைபெற உள்ளது. நாயன்மார்கட்டில் நாளை மறுதினம் மாலை 6 00 மணியளவில் இந்நிகழ்ச்சி இடம் பெறும்.

நாயன்மார்கட்டுச் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா வைபவத்தின் போது சிறப்பு நிகழ்ச்சியாக இது இடம்பெறவுள்ளது.

## யாழ். இந்துக்கல்லூரிக்கு நூற்றாண்டுமண்டபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நூற்றாண்டு மண்டபம் ஒன்று கட்டுவதற்கு நூற்றாண்டு விழாச் சபையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இம் மண்டபத்திற்குரியகால் (4ஆம் பக்கம் பார்க்க)

## கல்வெட்டையில் ஒரு தமிழர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினர் மட்டக்களப்பு மாவட் (4ஆம் பக்கம் பார்க்க)

## எம் மனிதநேய நடவடிக்கையை சிறிலங்கா புரிவதாக இல்லை

— ராஜன்

(யாழ்ப்பாணம்)

நாங்கள் சிறிலங்கா மக்களுக்கு என்றும் எமது மனிதநேயத்தை வெளிப்படுத்தி வருகிறோம். ஆனால், அந்தப் பேரினவாத சிறிலங்கா அரசாங்கம் புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. ராஜன் யுத்தக் கைதியான பொலிஸ் நாமரட்ணாவை விடுதலைசெய்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்த சமயம் கூறினார். (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சு நடத்துமாறு தொண்டமான் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆமோதிப்பார்களேயானால் ஜனாதிபதி பிரேம (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழப் பகுதியெங்கும் எளிமையான தைப்பொங்கல்

(யாழ்ப்பாணம்)

உழவர் திருநாளான தைப்பொங்கல் திருநாள் மிகவும் எளிமையான முறையில் தமிழீழ மக்களால் சாதி, சமய வேறுபாடின்றி நேற்றுக் கொண்டாடப்பட்டது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கோயில்கள், வீடுகள் ஆகியவற்றில் இப்பண்டிகை கொண்டாடப்பட்டது. சனசமூக நிலையங்களில் நாடகங்களும், கலைநிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. யாழ். பல்கலைக்கழகத்திலும் விசேட நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## கிறிஸ்தவ மதகுரு தலைமையில் தைப்பொங்கல் திருநாள்

(குருநகர்)

நேற்று (14-1-91) நடைபெற்ற தைப்பொங்கல் திருநாளில் புதிய திருப்பம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கிறிஸ்தவ மதகுரு ஒருவர் தலைமையில் காலையில் பொங்கலும், மாலையில் பொங்கல்விழாக்கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

யாழ். பிரதான வீதியில் திருமறைக் கலாமன்றம் நடத்திய மேற்படி வைபவங்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

## சங்கிலியன் திரை!

முத்திரைச் சந்தியில் சங்கிலியன திரையரங்கு நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது. இத்திரையரங்கில் தரமான படங்களும் தமிழீழப் போராட்டத்தின் தகவல் படங்களும் திரையிடப்படுகின்றன.

## வரி விளம்பரம்

**Second Handbook House**

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழித்தீன் உறை, பித்தளை, செம்பு, போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும் சோதிராசா, Second Hand Book House, 57, ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் லேன், யாழ்ப்பாணம். (B-1853)

**WIN INN LADIES ACADEMY**

சகல வகுப்புகளும் வழமை போல் நடைபெறும். புதிய மனையியல் வகுப்புகள் ஆரம்பம் 21-1-91 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலை 9—12 மணிவரை. 61/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (B/ 1859)

அரச நிறுவனங்கள், அதிகாரிகள்

# ஒத்துழைப்பு இன்மையால் செயற்பாடுகளில் சிரமம்

### - யாழ். பல்கலை. பதிவாளர்

(யாழ்ப்பாணம்)

"யாழ் பல்கலைக்கழகத்தின் வழமையான கல்வி, ஆராய்ச்சி, நிர்வாகம் போன்ற பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுவதற்கு ஏனைய அரச நிறுவனங்களும் அரச அதிகாரிகளும் ஒத்துழைக்கத் தவறியதால் எமது வழமையான செயற்பாடுகளை நாம் மேற்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது"

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக பதிவாளர் வருத்தம் தெரிவித்தார். இவ் விடயம் பற்றி மேலும் அவர் விளக்குகையில், கடந்த காலங்களில் தென் பகுதியிலும் வட பகுதியிலும் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் எந்தபல்கலைக்கழகமும், அரச அலுவலகங்களும் செயற்படாதிருந்த போதெல்லாம் எமது பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு வருடமும் பட்டதாரிகளை நாட்டின் நலன் கருதி உருவாக்கி வந்தோம்.

பல்கலைக்கழகத்தின் வங்கிக் கணக்கில் போதிய பணம் இருக்கின்ற போதிலும் தற்போதைய வடபகுதி சூழ்நிலை காரணமாக இவற்றை எல்லாத் தேவைகளுக்கும் பயன்படுத்த முடியாத நிலை இருந்து வருகின்றது.

இதனால் டீசல், மண்ணெண்ணெய், மருத்துவ இரசாயனப் பொருள்கள், காகிதாதிகள், போன்ற பல அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக வடபகுதி வங்கிகளுக்கு எடுத்துவரப்படும் பணத்தில் ஒரு சிறு பகுதி பணத்தை எமக்கு ஒதுக்கும்படி செயலக அதிகாரிகளையும், வங்கி அதிகாரிகளையும் பல முறை நாம் கேட்டுக் கொண்ட போதிலும் எமக்குப் போதியளவு பணம் வழங்கப்படவில்லை.

அண்மையில் மக்கள் வங்கிக்கு என எடுத்து வரப்பட்ட பணத்தில் மூன்று லட்சம் ரூபா மட்டுமே எமக்கு தரப்பட்டது. இப் பணம் மாணவர்களுக்கான மாபொலை கொடுப்பனவுகளைக் கொடுப்பதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளதாகவும், ஏனைய அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை என்றும் பதிவாளர் தெரிவித்தார். (க)

கொக்குவில் இந்துக் கல்லூரி

1991 ஆம் ஆண்டில் ஆண்டு 6 வகுப்பில் அனுமதி பெறுவதற்கான

## பிரவேசப் பரீட்சை

1. விண்ணப்பதாரிகள் 1990 ஆம் ஆண்டில் ஆண்டு 5 வகுப்பில் கல்வி கற்ற மாணவர்களாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் 1991. 01. 31 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
3. விண்ணப்பப் படிவங்களை பரீட்சைக் கட்டணமாக ரூபா 30/- செலுத்தி, கல்லூரி அலுவலகத்தில் 1991. 01. 25 வரை பெற்றுக்கொள்ளலாம்.
4. பரீட்சை நடைபெறும் திகதி பத்திரிகை மூலம் பின்னர் அறிவிக்கப்படும்.

அ. பஞ்சலிங்கம்
அதிபர்

1991. 01. 15 (B/1860)

## உளவளத்துணை நிலையம்

"சாந்திகம்"

### உளநலன் கருதி.... பயிற்சிக் களம்

ஒவ்வொரு சூழலும் மனித வாழ்வில் ஒவ்வொரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எம் மக்களின் உடல் உள நலன்களை நாம் வளர்க்க வேண்டும்.

எமது நிலையம் எம் மக்களின் உள நலனில் அக்கறை கொண்டுள்ளது

ஆனால், பாரிய பரந்த இப்பணியில் ஈடுபட ஆள்பலம் தேவை; பயிற்சியும் தேவை.

தகுந்த முறையான பயிற்சியை நாம் அளிப்போம். எம் மக்களின் உளநலனில் ஈடுபாடு கொண்டோர் பயிற்சி பெற எம்முடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவம் பெற்று விண்ணப்பிக்கவும். நேர்முகப் பேட்டியின் பின்னர் பயிற்சிகள் ஆரம்பமாகும். காலத்தின் அவசியம் கருதி காலதாமதம் செய்யாதீர்.

இப் பயிற்சியில் பங்கு கொள்ள ஆங்கில அறிவு அவசியம். தாமதமின்றி தமிழில் பயிற்சியளிக்க எமக்குக் காலம் தேவை.

நேரத்துடன் விண்ணப்பப் படிவம் பெற்றோர் தயவுசெய்து படிவம் நிறைத்து அனுப்பவும்.

மிகுதி தேர்வு நிறைவேற்றுப்

உளவளத்துணை நிலையம்
"சாந்திகம்"

## மகளும் மரணம்

கடந்த சனியன்று கிளிநொச்சி மாவட்டத்தில் நிகழ்ந்த விமானக் குண்டுவீச்சிற்கு இலக்காகி காயமடைந்து யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேலு கண்ணா (12) என்னும் சிறுமி நேற்று முன்தினம் மரணமானார். (85)

## திருடன் மடக்கிப் பிடிக்கப் பட்டான்

யாழ் நகர் ஆஸ்பத்திரி வீதி ஆசீர்வாதம் ஒழுங்கையில் திருடன் ஒருவன் இளைஞரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டான். அவன் வசமிருந்த கூரிய ஆயுதமும் மீட்கப்பட்டது இச் சம்பவம் கடந்த புதன் இரவு இடம் பெற்றது. பண்

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை வடிவேல்

யாழ்ப்பாணம் L. K. S கடையில் பணியாற்றியவரான முருகுப்பிள்ளை வடிவேல் காலமாகிவிட்டார். இவர் நாகரத்தினத்தின் அன்புக்கணவரும், குணசிங்கம், துரைசிங்கம், குலசிங்கம், செல்வேந்திரன், ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜா, சாந்தலெட்சுமி, ஜமுனாராணி ஆகியோரின் மாமனாரும், சுஜேந்திரன், சுஜிந்தன், சித்துஜா, தர்சினி, பிரபாலினி, யாழினி, பிரசாத், சாரங்கன், லக்ஸ்மன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15-01-91) பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெற்று உரும்பராய் மயானத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. குலசிங்கம்

உரும்பராய் இந்துக்கல்லூரி வீதி,
உரும்பராய் மேற்கு,
உரும்பராய்.

(R/1033)

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் சிவகாமி

புளியங்கூடலைச் சேர்ந்த தில்லையம்பலம் சிவகாமி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் மனைவியும், செல்லம்மா, நவரெத்தினம், அன்னபூரணம், சுப்பிரமணியம், சிவபாதசுந்தரம் (பிறின்ஸ் ஹோட்டல், வவுனியா), காலஞ்சென்ற ஆளம்பலம், காந்தமலர் (ஏ. ஜி. ஏ., நல்லூர்), காந்திமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் வைத்திலிங்கம், மாணிக்கம், நாகராசா, தங்கச்சியம்மா, திலகவதி, கனகரெத்தினம் (யாழ். பல்கலைக்கழக மொழி பெயர்ப்பாளர்), சந்திரன் (வீடமைப்பு அதிகார சபை, திருக்கோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காகப் பூதவுடல் அவர்களின் குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

தகவல்:
பிள்ளைகள்

(R 1032)

## நினைவு கூருகின்றோம்!

தை 15



2. விண்ணப்பங்கள் 1991. 01. 31 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

3. விண்ணப்பப் படிவங்களை பரீட்சைக் கட்டணமாக ரூபா 30/- செலுத்தி, கல்லூரி அலுவலகத்தில் 1991. 01. 25 வரை பெற்றுக்கொள்ளலாம்.

4. பரீட்சை நடைபெறும் திகதி பத்திரிகை மூலம் பின்னர் அறிவிக்கப்படும்.

அ. பஞ்சலிங்கம்
அதிபர்

1991. 01. 15 (B/1860)

# உளவளத்துணை நிலையம்

"சாந்திகம்"

## உளநலன் கருதி.... பயிற்சிக் களம்

ஒவ்வொரு சூழலும் மனித வாழ்வில் ஒவ்வொரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எம் மக்களின் உடல் உள நலன்களை நாம் வளர்க்க வேண்டும்.

எமது நிலையம் எம் மக்களின் உள நலனில் அக்கறை கொண்டுள்ளது

ஆனால், பாரிய பரந்த இப்பணியில் ஈடுபட ஆள்பலம் தேவை; பயிற்சியும் தேவை.

தகுந்த முறையான பயிற்சியை நாம் அளிப்போம். எம் மக்களின் உளநலனில் ஈடுபாடு கொண்டோர் பயிற்சி பெற எம்முடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவம் பெற்று விண்ணப்பிக்கவும். நேர்முகப் பேட்டியின் பின்னர் பயிற்சிகள் ஆரம்பமாகும். காலத்தின் அவசியம் கருதி காலதாமதம் செய்யாதீர்.

இப்பயிற்சியில் பங்கு கொள்ள ஆங்கில அறிவு அவசியம். தரங்குறையாமல் தமிழில் பயிற்சியளிக்க எமக்குக் காலம் தேவை.

நேரத்துடன் விண்ணப்பப் படிவம் பெற்றோர் தயவுசெய்து படிவம் நிறைத்து அனுப்பவும்.

மிகுதி நேரில்

உளவளத்துணை நிலையம்
"சாந்திகம்"
15, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்

(R. 1029)

DHL
WORLDWIDE EXPRESS

வெளிநாட்டுக் கடிதங்கள்
உடனுக்குடன்
சம்பந்தப்பட்ட நாடுகளிலேயே
தபாலில் சேர்க்கப்படும்.

குறைந்த கட்டணம் ரூபா 20-00

விபரங்களுக்கு:

Cosmos Marketing Services
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(B-1825)

கேட்டுக் கொண்ட போதிலும் எமக்குப் போதியளவு பணம் வழங்கப்படவில்லை.

அண்மையில் மக்கள் வங்கிக்கு என எடுத்து வரப்பட்ட பணத்தில் மூன்று லட்சம் ரூபா மட்டுமே எமக்கு தரப்பட்டது. இப் பணம் மாணவர்களுக்கான மாபொலை கொடுப்பனவுகளைக் கொடுப்பதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளதாகவும், ஏனைய அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை என்றும் பதிவாளர் தெரிவித்தார். (க)

## மகளும் மரணம்

கடந்த சனியன்று கிளிநொச்சி மாவட்டத்தில் நிகழ்ந்த விமானக் குண்டுவீச்சில் இலக்காகி காயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேலு கண்ணா (12) என்னும் சிறுமி நேற்று முன்தினம் மரணமானார். (85,

## திருடன் மடக்கிப் பிடிக்கப் பட்டான்

யாழ் நகர் ஆஸ்பத்திரி வீதி ஆசீர்வாதம் ஒழுங்கையில் திருடன் ஒருவன் இளைஞரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டான். அவன் வசமிருந்த கூரிய ஆயுதமும் மீட்கப்பட்டது இச் சம்பவம் கடந்த புதன் இரவு நள்ளிரவு இடம் பெற்றது. பண்டாரி சின்னத்துரை என்பவரின் வீட்டு முற்றத்தில் இருந்த இரண்டு சைக்கிள்களைத் திருட முயற்சித்த போதே ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சிவ்லோன் ராதா கையும் மெய்யுமாகப் பிடிபட்டான் இவரின் கோஷ்டியைச் சேர்ந்த ஏனைய நான்கு பேரும் தப்பிக் கொண்டனர்.

திருடனை விடுதலைப் புலிகளிடம் இளைஞர் ஒப்படைத்துள்ளனர் விசாரணை தொடர்கிறது.

## நிவாரணம் வழங்க முயற்சி இல்லை

(வவுனியா)

கடந்தகால வன்செயலில் பாதிப்படைந்த மக்கள் அனைவருக்கும் கடந்த டிசம்பர்மாதத்திற்குள் நிவாரணம் வழங்கப்படும் என்று வவுனியா கச்சேரியால் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 89 ஆம் ஆண்டுக்கு முன் சிறிலங்கா இராணுவத்தினராலும் இந்திய இராணுவத்தினராலும் வவுனியா மாவட்டத்தில் பலர் பாதிப்படைந்தனர் என்பது தெரிந்ததே. (தி)

காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற நில்லையம்பலத்தின் மனைவியும், செல்லம்மா, நவரெத்தினம், அன்னபூரணம், சுப்பிரமணியம், சிவபாதசுந்தரம் (பிறின்ஸ் ஹோட்டல், வவுனியா), காலம் சென்ற அருளம்பலம், காந்தமலர் (ஏ. ஜி. ஏ., நல்லூர்), காந்திமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் வைத்திலிங்கம், மாணிக்கம், நாகராசா, தங்கச்சியம்மா, திலகவதி, கனகரெத்தினம் (யாழ். பல்கலைக்கழக மொழி பெயர்ப்பாளர்), சந்திரன் (வீடமைப்பு அதிகார சபை, திருக்கோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.


அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காகப் பூதவுடல் அவர்களின் குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

தகவல்:
பிள்ளைகள்

(R 1032)

# நினைவு கூருகின்றோம்!

## தை 15



1989ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

## மேஜர் தும்பன்

அ. மரியதுரை (மகேந்திரன்)
பண்டத்தரிப்பு

அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

(B-1842)

### சிந்தனைக்கு

உன் சொல்லுக்கு ஒப்பச் செயலையும்,
செயலுக்கு ஒப்பச் சொல்லையும் இணங்கச் செய்.
— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 15-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# மதியற்ற முன்னோர் வழியில் மதிநுட்பத்துடன் ரஞ்சன்

"சிங்களம் மட்டும் சட்டத்தை 24 மணி நேரத்தில் அமுலாக்குவோம் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நாட்டில் இனவாதம் வளரத் தொடங்கியது. 24 மணி நேரத்தில் சிங்களத்தைப் புகுத்துவோம் எனக் கூறியதும் தமிழ் மக்கள் கோபமடைந்தனர். பெரும்பான்மையினர் எதையுமே பலாத்காரமாக சிறுபான்மையினரிடம் புகுத்த முடியாது"

"டி. எஸ் சேனநாயக்காவின் பின் வந்த ஆட்சியாளர்களிடம் மதிநுட்பம் இருக்கவில்லை"

"பிரச்சினைகளின்போது அரசியல்வாதிகள் எப்படியோ தப்பித்துக்கொண்டு பொதுமக்களையே முன்னணிக்கு அனுப்புகின்றனர் இதனால் பொதுமக்கள் பாதிப்படைகின்றனர் 32 வருடங்களாக இதுதான் நடந்தது"

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசும் தமிழ்த் தலைவர்களும் முற்பட்ட போதெல்லாம் இடையூறுகள் ஏற்பட்டன. எனவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் முடிவிற்கு வந்தனர். தனிநாடுதான் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு என நம்பினார்கள்"

இந்தக் கருத்துக்கள் யாவும் சிறிலங்காவின் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவினால் கடந்த வாரம் கொழும்பில் நடந்த அகில இலங்கைச் சோனகர்சங்கம்ஒழுங்குசெய்தகூட்டத்தில் பேசியவையாகும்.

சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா பிரச்சினையை இவ்வளவு தெளிவாக புரிந்து வைத்திருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். இதன் மூலம், இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று தோற்றம் பெறுவதற்கும், அது ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கும் சிங்கள அரசியல்வாதிகளின் நடவடிக்கைதான் காரணம் என்பதையும், தமிழர் போராட முற்பட்டமை நியாயம் என்பதையும் அமைச்சர் ஒத்துக் கொள்கின்றார்.

ஆனால், அன்றைய அரசியல்தலைவர்கள் மதிநுட்பம் இல்லாமலும், அரசியல்வாதிகள் மக்களை நெருக்கடியில் சிக்க வைத்துவிட்டதாகவும் விசனப்படும் அமைச்சர் ரஞ்சன் இன்று தானும் அவ்வாறு செயற்படுவதுதான் தற்பொழுது ஆச்சரியப்பட வைக்கின்றது.

தமிழர் தேசிய இன நெருக்கடி ஆயுதப் போராட்ட வடிவமெடுத்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் சென்றுவிட்டாலும், 1983 ஆம் ஆண்டின் பின்பே போராட்டம் தீவிரமுனைப்புப் பெற்றது. அந்தக் காலத்தில் இருந்து இன்று வரை ஐக்கிய தேசியக்கட்சியே ஆட்சியில் இருந்து வருகின்றது அமைச்சர் ரஞ்சனும் அரசியலில் இருந்து வருகின்றார் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாகாலத்தில்ஐ.தே.கட்சியின்தலைவராகவும், பின்னர் அமைச்சராகவும் இருந்து வருகின்றார்.

இந்த நிலையில், தமிழருக்கு அநீதி இழைக்கப் பட்டதனால்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் எனத் தெரிந்துகொண்டும் ஏன் அரசியல் தீர்வொன்றினை அமைச்சர் ரஞ்சன் முன்வைக்கவில்லை.

சிறுபான்மை மக்களுடன் பெரும்பான்மை மக்கள் மதிநுட்பத்துடன்...

தனியார் கல்வி நிறுவனங்களில்

# பாடசாலை நேரத்தில் மாணவருக்கு வகுப்புக்கள் நடத்தக் கூடாது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தனியார் கல்வி நிலையங்களிலும், பிரத்தியேக வகுப்புக்களிலும் ஆசிரியர்கள், இயக்குநர்கள், மாணவர்கள் ஆகியோர் கடைப்பிடிக்க வேண்டிய சில ஒழுங்கு விதிகள் பற்றி யாழ் மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தலின் படி பாடசாலை நடைபெறும் நேரங்களில் பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புக்கள் எதையும் நடத்த முடியாது.

இந் நாட்களில் காலை 6.00 மணி முதல் 7.30 மணிவரையும், மாலை 2.00 மணி முதல் 6.30 மணி வரையுமே வகுப்புக்கள் ஒழுங்கு செய்வதுடன் பாடசாலையில் பயிலும் மாணவர்களை பகல் நேர வகுப்புக்களில் அனுமதித்தல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சகல தனியார் கல்வி நிறுவனங்களும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையையும் விடுமுறை நாட்களாக கருத வேண்டும். க. பொ. த. சாதாரண தரம் வரையான வகுப்புக்கள் ஒவ்வொன்றிலும் அதிக பட்சம் 70 மாணவர்களும் க. பொ. த. உயர்தர வகுப்புக்களில் அதிக பட்சம் 100 மாணவர்களும் மட்டுமே அனுமதிக்கப்படுதல் வேண்டும். எல்லாப் பாடங்களையும் எமது நிறுவனத்திலேயே பயில வேண்டும் என்று மாணவர்களை நிர்ப்பந்திக்கக் கூடாது.

க. பொ. த. உயர்தர வகுப்புக்களுக்குரிய வாராந்த வகுப்புகளுக்கு பாடம் ஒன்றிற்கு 25 ரூபாவும், பகல் முழு நேர வகுப்புக்களுக்கு பாடம் ஒன்றுக்கு 30 ரூபாவும், க. பொ. த. சாதாரண தரத்துக்கு உட்பட்ட வகுப்புகளுக்கு 6 பாடங்களுக்கான மொத்தக் கட்டணம் 70 ரூபாவும் தனி ஒரு பாடத்துக்கு 15 ரூபாவும் மட்டுமே அறவிடப்பட வேண்டும்.

சகல கல்வி நிறுவனங்களும் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளைத் தவிர்க்கும் முகமாக உணவு உற்பத்தியில் ஈடுபட வேண்டும்.

தற்போது பதிவு செய்யப்பட்ட கல்வி நிலையங்களைத் தவிர புதிதாக எந்த ஒரு கல்வி நிலையத்தையும் ஆரம்பிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (க)

## குறுகிய, நீண்டகால உற்பத்தி திட்டக் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

குறுகிய கால உணவு உற்பத்தி, நீண்ட கால உணவு உற்பத்தித் திட்டம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சிக் கச்சேரியில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் 'றாட்' ஸ்தாபனப் பொறுப்பாளர் திரு. ரவி, செல்வின், வன்னி மாவட்டப் பொறுப்பாளர் திரு. எம். ஜி. ஆர். கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திரு. சொ. அமிர்தலிங்கம், திரு. க. குணராசா மற்றும் விவசாய பீட போதனாசிரியர்களான கைநிதி மோகதாஸ், மூலிகை வளர்ப்புப் பகுதிப் பொறுப்பாளர் கலாநிதி சடாட்சரதாஸ், மற்றும் விவசாயத் திணைக்களங்களின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் குறிப்பாக கோதுமை மாவையும் பாணையும் நிராகரித்து, நெல், சாமி குரக்கன், மரவள்ளி போன்றவற்றை உற்பத்தி செய்யும்படியும், நீரை வீண் விரயம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

## ஆதாரம் காட்டிப் பெறவும்

சாவகச்சேரி கண்டிவீதியில் பெயர் பொறிக்கப்பட்டுள்ள பவுண் மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு, சாவகச்சேரி விடுதலைப் புலிகள் வட்டவை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியை செல்வி பராசக்தி நடராசா என்பவர் இந்த மோதிரத்தைக் கண்டெடுத்தவராவார்.

இந்த மோதிரத்தின் உரிமையாளர் தகுந்த அத்தாட்சிகளுடன், சாவகச்சேரி வட்டவை அலுவலகத்திற்குச் சென்று பெற்றுக்கொள்ளலாம் என அப்பிரதேசப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## நினைவஞ்சலி நிகழ்ச்சிகள்

1988 ஆம் ஆண்டு ஜனவரி பன்னிரண்டாம் திகதி இந்தியப் படைகளுடனான மோதலின் போது நீர்வேலியில் வீரமரணமடைந்த நல்லூர் கல்வியங்காட்டைச் சேர்ந்த வீரவேங்கை "ஜெயந்தன் பேபி அருணா" எனப்படும் செல்லச்சாமி தணிகேசன் அவர்களுடைய மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் கடந்த சனியன்று நல்லூர் சட்டநாதர்கோயில் முன்றலில் நடைபெற்றன. (20)

## முல்லை மாவட்டத்திற்கு ஒருவார நிவாரணம்மட்டுமே

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு இதுவரை ஒரு வாரத்துக்கான நிவாரணம் மட்டுமே முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதத்திற்குப் பின்னர் இங்கு உணவுப் பொருள்கள் மிகவும் குறைவாகவே அனுப்பப்பட்டுள்ளமையினால் இப்பகுதி மக்கள் மிகவும் மோசமான உணவுப் பற்றாக்குறைக்கு ஆளாகியுள்ளனர்.

அத்துடன் இடம்பெயர்ந்து வந்தவர்களுள் முகாம்களுக்கு வெளியில் உள்ளவர்களுக்கு இந்த உதவி கூடக் கிடைப்பதில்லை என்றும் கூறப்படுகிறது.

## மயக்க மருந்துடன் திரிந்த ...

## இரவல்...

அனுப்புகின்றனர் இதனால் பொதுமக்கள் பாதிப்படைகின்றனர் 32 வருடங்களாக இதுதான் நடந்தது ''

''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசும் தமிழ்த் தலைவர்களும் முற்பட்ட போதெல்லாம் இடையூறுகள் ஏற்பட்டன. எனவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் முடிவிற்கு வந்தனர். தனிநாடுதான் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு என நம்பினார்கள் ''

இந்தக் கருத்துக்கள் யாவும் சிறிலங்காவின் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவினால் கடந்த வாரம் கொழும்பில் நடந்த அகில இலங்கைச் சோனகர்சங்கம்ஒழுங்குசெய்தகூட்டத்தில் பேசியவையாகும்.

சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா பிரச்சினையை இவ்வளவு தெளிவாக புரிந்து வைத்திருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். இதன் மூலம், இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று தோற்றம் பெறுவதற்கும். அது ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கும் சிங்கள அரசியல்வாதிகளின் நடவடிக்கை தான் காரணம் என்பதையும், தமிழர் போராட முற்பட்டமை நியாயம் என்பதையும் அமைச்சர் ஒத்துக் கொள்கின்றார்.

ஆனால், அன்றைய அரசியல்தலைவர்கள் மதிநுட்பம் இல்லாமலும், அரசியல்வாதிகள் மக்களை நெருக்கடியில் சிக்க வைத்துவிட்டதாகவும் விசனப்படும் அமைச்சர் ரஞ்சன் இன்று தானும் அவ்வாறு செயற்படுவதுதான் தற்பொழுது ஆச்சரியப்பட வைக்கின்றது.

தமிழர் தேசிய இன நெருக்கடி ஆயுதப் போராட்ட வடிவமெடுத்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் சென்றுவிட்டாலும், 1983 ஆம் ஆண்டின் பின்பே போராட்டம் தீவிர முனைப்புப் பெற்றது. அந்தக் காலத்தில் இருந்து இன்று வரை ஐக்கிய தேசியக்கட்சியே ஆட்சியில் இருந்து வருகின்றது. அமைச்சர் ரஞ்சனும் அரசியலில் இருந்து வருகின்றார் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாகாலத்தில்ஐ தே கட்சியின்தலைவராகவும், பின்னர் அமைச்சராகவும் இருந்து வருகின்றார்.

இந்த நிலையில், தமிழருக்கு அநீதி இழைக்கப் பட்டதனால்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் எனத் தெரிந்துகொண்டும் ஏன் அரசியல் தீர்வொன்றினை அமைச்சர் ரஞ்சன் முன்வைக்கவில்லை.

சிறுபான்மை மக்களுடன் பெரும்பான்மை மக்கள் மதிநுட்பத்துடன், தாராள மனப்பான்மையுடனும் செயற்பட வேண்டும் எனத் தெரிவிக்கும் அமைச்சர் ரஞ்சன் நடைமுறையில் 'மதிநுட்பத்துடன்' மட்டும் செயற்பட எண்ணுகின்றாரே ஒழிய தாராள மனப் பான்மையுடன் ஏன் செயற்படவில்லை? தமிழருக்கு அநீதி இழைக்கப்பட்டதனாலேயே தமிழர் ஆயுதம் தூக்கினார்கள் எனக் கூறும் அமைச்சர், அதைத் தீர்ப்பதற்கு வழி தேடாமல் ஆயுதங்களைக் கொடுங்கள் என்பது எவ்வாறு பொருந்தும்.

இங்குதான் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவும் முன்னைய அரசியல்வாதிகள் போன்று மக்களை அரசியலுக்குள் முன்தள்ளித்தான் அரசியலில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் பார்க்கின்றார்.

கடந்த காலத்தில், சிங்கள மக்களை அரசியலுக்கு முன்னுக்குத்தள்ளுவதற்காக அரசியல்வாதிகளினால் இனவாதம் புகுத்தப்பட்டதும் பின்னர் அந்த இனவாதமே அரசியல் தீர்வுகளுக்கு வழிவிடாமல் தடுத்ததுமே அன்றைய அரசியல் வரலாறாகும்.

இன்றும் சிறிலங்காவின் அரசியல் வரலாறும் அவ்வாறே உள்ளது. ஆகையினால் அதனையே அமைச்சர்ரஞ்சனு செய்கிறார் ஆனால்அன்றுள்ளவர்கள் மதிநுட்பத்துடன்செயற்படவில்லைஎனத் தெரிவிக்கின்றார். இந்தக் கூற்று அமைச்சர் ரஞ்சனின் தவறு ஏனெனில் அன்றும் சிங்களத் தலைவர் தாம் 'மதிநுட்பத்துடன்' செயற்படுவதாக எண்ணியே இன்று ரஞ்சன் செய்வதை செய்தார்கள்.

இந்த நிலையில், சிங்கள அரசியல்வாதிகள் தங்களால் தோற்றுவிக்கப்பட்ட அரசியல் பிரச்சினைகளுக்கு முன்னையவர்களையும், மற்றவர்களையும் குறை கூறுவதில் பயன் ஏதும் இல்லை முதலில் தமது தவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும் பின்னர் முன்னையவர் தவற்றை மாற்றி அமைக்க வேண்டு

அதைவிடுத்து முன்னர் நடந்தது மதிநுட்பமற்ற செயல் தற்பொழுது நான் மதிநுட்பத்துடன் அதனையே செய்கின்றேன் என்றால் பிரச்சினைகள் ஒருபோதும் தீரப் போவதில்லை.

## திட்டக் கலந்துரையாடல்

(கிளிநொச்சி,

குறுகிய கால உணவு உத்பத்தி, நீண்ட கால உணவு உற்பத்தித் திட்டம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சிக் கச்சேரியில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் 'றாட்' ஸ்தாபனப் பொறுப்பாளர் திரு. ரவி, செல்வின், வன்னி மாவட்டப் பொறுப்பாளர் திரு. எம். ஜி. ஆர். கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திரு. சொ. அமிர்தலிங்கம், திரு. க. குணராசா மற்றும் விவசாய பீட போதனாசிரியர்களான கைநிதி மோகதாஸ், மூலிகை வளர்ப்பு பகுதிப் பொறுப்பாளர் கலாநிதி சடாட்சாதாஸ், மற்றும் விவசாயத் திணைக்களங்களின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் குறிப்பாக கோதுமை மாவையும் பாணையும் நம்பியிராது, நெல், சாமி குரக்கன், மரவள்ளி போன்றவற்றை உற்பத்தி செய்யும்படியும், நீரை வீண் விரயம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

## ...பெறவும்

சாவகச்சேரி சண்டிவீதியில் பெயர் பொறிக்கப்பட்டுள்ள பவுண் மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு, சாவகச்சேரி விடுதலைப் புலிகள் வட்டவை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது,

சவகச்சேரி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியை செல்வி பராசக்தி நடராசா என்பவர் இந்த மோதிரத்தைக் கண்டெடுத்தவராவார்;

இந்த மோதிரத்தின் உரிமையாளர் தகுந்த அத்தாட்சிகளுடன், சாவகச்சேரி வட்டவை அலுவலகத்திற்குச் சென்று பெற்றுக் கொள்ளலாம் என அப்பிரதேசப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## நினைவஞ்சலி நிகழ்ச்சிகள்

1988 ஆம் ஆண்டு ஜனவரி பன்னிரண்டாம் திகதி இந்தியப் படைகளுடனான மோதலின் போது நீர்வேலியில் வீரமரணமடைந்த நல்லூர் கல்வியங்காட்டைச் சேர்ந்த வீரவேங்கை ''ஜெயந்தன் பேபி அருணா'' எனப்படும் செல்லச்சாமி தணிகேசன் அவர்களுடைய மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் கடந்த சனியன்று நல்லூர் சட்டநாதர்கோவில் முன்றலில் நடைபெற்றன. (20)

## முல்லை மாவட்டத்திற்கு ஒருவார நிவாரணம்மட்டுமே

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு இது வரை ஒரு வாரத்துக்கான நிவாரணம் மட்டுமே முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதத்திற்குப் பின்னர் இங்கு உணவுப் பொருள்கள் மிகவும் குறைவாகவே அனுப்பப்பட்டுள்ளமையினால் இப்பகுதி மக்கள் மிகவும் மோசமான உணவுப் பற்றாக்குறைக்கு ஆளாகியுள்ளனர்.

அத்துடன் இடம்பெயர்ந்து வந்தவர்களுள் முகாம்களுக்கு வெளியில் உள்ளவர்களுக்கு இந்த உதவி கூடக் கிடைப்பதில்லை என்றும் கூறப்படுகிறது.

## இரவல் சயிக்கிளில் சூதாட்டம்

(கொக்குவில்)

இரவல் துவிச்சக்கரவண்டியைப்பணயம் வைத்து சூதாட்டம் நடாத்தி துவிச்சக்கர வண்டியை இழந்தவர் தலைமறைவாகியுள்ளார்.

பிறவுண் வீதி, கொக்குவில் பகுதியைச் சேர்ந்த நயினார் என்பவரின் சயிக்கிளை இரவலாகப் பெற்று சூதாட்டத்தில் தோல்விகண்ட ஒருவர் தலைமறைவாகியதைத்தொடர்ந்து சயிக்கிள் உரிமையாளர் இது பற்றி விடுதலைப்புலிகளிடம் முறையிட்டுள்ளார். (க)

## மயக்க மருந்துடன் திரிந்த திருடன் பிடிபட்டான்

(நல்லூர்)

கடந்த பல நாட்களாக நல்லூர் பகுதியில் காவல் நாய்களுக்கு மயக்க மருந்து கொடுத்து விட்டுபல வீடுகளில் கொள்ளை நடத்தி வந்த திருடன் ஒருவன் விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டுள்ளான்.

பொதுமக்களின் வீடுகளிலும், கூட்டுறவுச்சங்க கிளைகளிலும் திருட்டு நடத்திவந்த க. சுந்தரலிங்கம் (வயது 27) என்ற இந்த திருடனிடம் இருந்து ஒரு தொலைக்காட்சிப்பெட்டி, இரண்டு வானொலிப்பெட்டிகள், நான்கு துவிச்சக்கர வண்டிகள் போன்ற பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இத்திருடனை விடுதலைப் புலிகளின் நல்லூர் பிரதேசப் பொறுப்பாளர் கைது செய்துள்ளார். (க)

## மாதாந்த மாநாடு

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்கள் கூட்டுறவுப் பகுதி உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளும் மாதாந்த மாநாடு நாளை 16 ஆம் திகதி காலை 9மணிக்கு சிறாம்பியடியில் உள்ளமணிய கட்டடத்தில் உள்ள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் என். சிவநாதன் அறிவித்துள்ளார்.

## வவுனியாவிற்கு மருந்து; முயற்சி கை கூடவில்லை

வவுனியா மாவட்டத்தில் உள்ள பிரதேச வைத்திய சாலைகளுக்கு மருந்துப்பொருள்கள் அனுப்பிவைப்பதற்கு சிறுவர் நிதியமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் எடுத்த முயற்சி கைகூடவில்லை என்று தெரிவிக்கப் பட்டது.

கடந்த மாதம் 25ஆம் திகதியிலிருந்து மேற்படி சிறுவர் நிதியமும் செஞ்சிலுவைச் சங்கமும் வவுனியா நகரப்பகுதியில் உள்ள அரச வைத்திய சாலையிலிருந்து பிரதேசவைத்திய சாலைகளுக்கு மருந்துப் பொருள்களை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. இந்த நடவடிக்கைக்குவவுனியாஇராணுவ அதிகாரிகளினால் தொடர்ந்து மறுப்புத் தெரிவிக்கப் படுகிறது.

ஓமந்தை, பூவரசன்குளம், புளியங்குளம், நெடுங்கேணி போன்ற பிரதேச வைத்திய சாலைகளில் மருந்துப்பொருள்களுக்குதொடர்ந்து தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் கடந்தசூன்மாதத்திற்குப் பின் இவ் வைத்திய சாலைகளுக்கு மருந்துப் பொருள்கள் எவையும் அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் ஈழநாதம் செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே. (தி

# போரைத் தவிர்க்கலாம் என்ற நம்பிக்கையை நான் இழக்கவில்லை

\- பெரஸ்டி கொயிலர்

(பரிஸ்)

ஐ. நா. சபை ஈராக்கிற்கு விதித்த காலக்கெடு இன்றுடன் முடிவடையும் அதேநேரம் வளைகுடாவில் அமைதியை நிலைநாட்டும் கடைசி முயற்சியாக ஐ நா. தலைமைச் செயலாளர் பெரஸ்டிகொயிலர் நேற்று பிரான்ஸ் ஜனாதிபதி மித்ரோனைச் சந்திக்க பரிஸ் சென்றுள்ளார்.

கடந்த இரண்டு நாட்களாக பாக்தாத்தில் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைனுடனும், வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீசுடனும் சுமார் 5 மணி நேரத்திற்கு மேலாக பேச்சு வார்த்தை நடத்திய பின் பெரஸ்டிகொயிலர் நேற்று பிரான்ஸ் ஜனாதிபதி மித்ரோனைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

முன்னதாக பெரஸ்டிகொயிலர் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது 'போரைத் தவிர்ப்பது என்ற நம்பிக்கையை நான் இன்னும் இழக்கவில்லை' என்று தெரிவித்தார். ஆனால் பேச்சுக்கள் தொடர்பாக எந்தத் தகவலையும் வெளியிடவில்லை இதேநேரம் வளைகுடாவில் போர் ஏற்படுமா? என்று நிருபர் ஒருவர் கேட்டபோது "பதில் அளிக்க இயலாத ஒரு கேள்வியை கேட்டதாக" தெரிவித்தார்.

இதேவேளை ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைன் குவைத்தை விட்டுக் கொடுக்காது இறுதிவரை போராடும்படி ஈராக்கிய மக்களை கேட்டுக் கொண்டிருக்கிறார் தாம் போரை விரும்பவில்லை என்றும் வளைகுடாவில் அமைதி நிலவ வேண்டுமானால் வாஷிங்டனின் கையில்தான் அது இருக்கிறது என்றும் தெரிவித்தார். அதே வேளை குவைத்தை விட்டுக் கொடுப்பதற்கு இல்லை என்ற ஈராக் அதிபர் சதாம் ஹூசைனின் திட்டத்திற்கு ஈராக்கிய பாராளுமன்றமும் ஒருமனதாக நேற்று ஒப்புதல் அளித்தது.

இதே நேரம் போரைத் தவிர்ப்பதற்கான இறுதிமுயற்சியில் லிபியா, ஜோர்டான், ஈரான் போன்ற நாடுகள் இறங்கியுள்ளன. லிபிய ஜனாதிபதி கடாபி தமது ராணுவத் துணைராணுவத் தளபதியை பாக்தாத்திற்கு அனுப்பியுள்ளார். அதே போல ஈரானும், ஜோர்டானும் போரை தவிர்க்குமாறு வாஷிங்டனையும், பாக்தாத்தையும் கேட்டுக்கொண்டிருக்கின்றன.

போரைத் தவிர்க்குமாறு அமெரிக்கா வேண்டுகோள்

வளைகுடாவில் போர் ஏற்படும் இடத்து அதனை தவிர்க்குமாறு இஸ்ரேலை அமெரிக்கா கேட்டுக்கொண்டிருக்கிறது ஆனால் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரோ போரில் நிச்சயம் இஸ்ரேல் கலந்து கொள்ளும் என்றும் இஸ்ரேலைத் தாக்காது ஈராக் போரில் ஈடுபடாது" எனத் தெரிவித்துள்ளார். பாதுகாப்பிற்காக தாம் போரில் கலந்து கொள்வோம் எனவும் தெரிவித்தார்.

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி பேச்சுவார்த்தை நடத்துவதற்கென ஐரோப்பிய குடும்ப நாடுகள் பாக்தாதிற்கு செல்லவில்லை என பிறசெல்சில் நடத்திய வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

அதேவேளை பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் பாக்தாத் செல்லும் வாய்ப்பு முற்றாக நிராகரிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

---

தேவைப்படின்

நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த திருமதி பத்மநாதன் புலித் தலை பொறிக்கப்பட்ட பவுண் நாணயத்தைத் தனது மகன் ஒரு ஞாபகச் சின்னமாக வைத்துப் பாதுகாக்க இருப்பதாகத் தெரிவித்தார்.

மீட்பு நிதிக்கு பங்களிப்பை வழங்கிய கடன் பத்திரதாரர்களுக்கு நேற்று முற்பகல் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் வைத்து தமிழேந்தியினால் கடன் மீளளிக்கப்பட்டது. சுமார் 100 கடன் பத்திரதாரர்கள் பவுணை மீளப் பெறுவதற்காக அங்கு கூடியிருந்தனர்.

---

உயிரிலும்

கழகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பாதுகாப்புப் படையினர் மத்தியில் பேசும் போது கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து பேசும் போது எமது படையினர் தமது உயிர், உடல் உறுப்புக்கள், உற்றார் உறவினர்கள் போன்றவற்றைப் பணயம் வைத்துப் போரிடுகின்றனர் என்றார்.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தின்போது படையினர் பலர் உயிரிழந்தமையும், ஆயிரக்

---

## ஈராக்கின் புதிய தேசியக் கொடி

ஈராக்கிய தேசியக் கொடி நேற்றுத் திடீரென மாற்றப்படுவதாக ஈராக்கிய அதிபர் சதாம் ஹூசைன் அறிவித்துள்ளார். புதிதாக அமையவுள்ள ஈராக்கிய கொடியில் அல்லாஹோ அக்பர் என்ற கோசமும் இடம்பெறுகின்றது.

அதேவேளை ஈராக்கிய மக்களையும், இஸ்லாமிய உலகத்தையும் புனிதப்போருக்குத் தயாராகும்படியும் சதாம் ஹூசைன் அழைப்பு விடுத்துள்ளார்.

---

பொங்கல் தின

ஆர். பி. ஜி. மூலமும் துப்பாக்கிகள் மூலமும் பலத்த தாக்குதல் நடத்தியபடி முன்னேறிய சமயம் விடுதலைப்புலிகள் தற்காப்புக்காக எதிர்த் தாக்குதலை நடத்திய போது கடும் சண்டை மூண்டது.

சுமார் ஒன்றரை மணி நேரம் வரை நடைபெற்ற மோதலின்பின் பலத்த இழப்புகளுடன் இராணுவத்தினர் பின்வாங்கினர்.

---

## சதாம்ஹூசெனுக்கு ஆதரவாக பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

(இஸ்லாமாபாத்)

அமெரிக்காவிற்கெதிராகவும், ஈராக்கிய அரசுத் தலைவர் சதாம் ஹூசைனுக்கு ஆதரவாகவும் பாகிஸ்தானின் பல நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகின்றன. ஈராக் அதிபர் சதாம் ஹூசைனின் அணியில் சேர்ந்து கொண்டு போராடத் தொண்டர்கள் தேவை என்று இஸ்லாமிய கட்சியின் தலைவர் மௌலானா நூரினி வேண்டுகோள்விடுத்துள்ளார்.

கடந்தவாரம் பாக்தாதில் நடந்த இஸ்லாமிய மாநாடு சென்று விட்டு கராச்சி திரும்பியுள்ள நூரினி நேற்றுமுதல் தொண்டர்கள் பதிவு நிலையங்கள் திறக்கப்படும் என்றும், சதாம் ஹூசையினை ஆதரிப்போர் பெயரைப்பதிவு செய்துகொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

---

மனிதநேய

சாரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர். அத்துடன் இம்மாதம் 9 ஆம் திகதி காலமான பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் சடலமும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட சார்ஜன்ட கருணாரெட்ணா (இல: 1152), வயது சுமார் 50 குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த ஹெற்றிப்பொல கிராமத்தைச்சேர்ந்தவராவர். இவர் மன்னார் பொலிஸைச் சேர்ந்தவர். மார

---

## மோட்டோர் சைக்கிள் விபத்து; நான்குபேர் காயம்

(யாழ்ப்பாணம்)

வேகமாக வந்த இரு மோட்டோர் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் நான்குபேர் காயமடைந்தனர்.

நேற்று மாலை நல்லூர்கந்தசுவாமி கோயிலின் முன் வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் ச. செல்வநாயகம் (வயது 28), ரீ. சிவதாஸ் (வயது 32), சி. செல்வம் (வயது28), ஆகியோர் படுகாயமடைந்ததுடன் செ. விக்னா (வயது 28) என்பவரும் சிறு காயத்துக்குள்ளானார். இவர்கள் அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

---

## தமிழகத்தில் போராளி சுட்டுக் கொலை

(திருச்சி)

வேலூரில் தமிழகப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளி ஒருவர் கொல்லப்பட்டதாக தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

---

## திருவள்ளுவர் தினம்

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீனத்தில திருவள்ளுவர் விழாவில் புதிய திருவள்ளுவர் படம் திரை நீக்கம் செய்யப்படும். அத்துடன் தினமும் ஒரு திருக்குறள் படிக்கும் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். அங்கு திருவள்ளுவர் ஸ்ரிக்கர் வெளியிடப்படும் எனவும் தெரிய வருகின்றது.

---

## நாதனின் நினைவஞ்சலி

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் இந்திய இராணுவத்தினரால் அடித்துக்கொலை செய்யப்பட்ட மருதனாமடத்தைச் சேர்ந்த மொட்டை நாதனின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மாலை 6.00 மணியளவில் மருதனாமடம் உப அலுவலக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பல பிரமுகர்கள் இதில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

---

## லெப். முத்து வீதி திறப்பு

(செ. தூமை.)

வீரமரணமடைந்த லெப்டினன்ட் முத்து (ஜெயக்குமார் அருச்சுனன்) நினைவாக மானிப்பாய் அந்தோனியார் கோயிலுக்கு அருகாமையில் உள்ள வீதிக்கு ஜெயக்குமார் (முத்து) வீதியென நேற்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மானிப்பாயில் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சங்கர் தலைமையில் இந்தப் பெயர்சூட்டும் வைபவம் இடம்பெற்றது.

கல்லுண்டாய் வெளியில் 16-10 87 இல் இந்திய இராணுவத்துடனான நேரடிமோதலின்போது இவர் வீரமரணம் அடைந்ததும், இந்திய இராணுவ உயரதிகாரிகள் உட்பட 30க்கும் மேற்பட்டோர் இந்த மோதலின்போது கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

---

யாழ் இந்துக்கல்லூரி

கோன் விழாவும், நூற்றாண்டு நிறைவு விழாவும் இம்மாதம் 17, 18, 19, 20 ஆம் திகதிகளில் மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளன வீதிகளை அலங்கரிக்குமாறு நூற்றாண்டு விழாக்குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

---

புலிகளுடன்

தாசாகவும் இருந்த ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

---

கிறிஸ்தவ

கலா மன்ற இயக்குநர் வண. பேராசிரியர் நீ மரிய சேவியர் அடிகள் தலைமையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (21)

---

கல்வெட்டையில்

டத்தில் உள்ள கல்வெட்டை

ஆனால் போர்க்கைதிகள் தொடர்பாக எந்தத் தகவலையும் வெளியிடவில்லை இதேநேரம் வளைகுடாவில் போர் ஏற்

### தேவைப்படின்

நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த திருமதி பத்மநாதன் புலித் தலை பொறிக்கப்பட்ட பவுண் நாணயத்தைத் தனது மகன் ஒரு ஞாபகச் சின்னமாக வைத்துப் பாதுகாக்க இருப்பதாகத் தெரிவித்தார்.

மீட்பு நிதிக்கு பங்களிப்பை வழங்கிய கடன் பத்திரதாரர்களுக்கு நேற்று முற்பகல் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் வைத்து தமிழேந்தியினால் கடன் மீளளிக்கப்பட்டது. சுமார் 100 கடன் பத்திரதாரர்கள் பவுணை மீளப் பெறுவதற்காக அங்கு கூடியிருந்தனர்.

### உயிரிலும்

கழகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பாதுகாப்புப் படையினர் மத்தியில் பேசும்போது கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து பேசும்போது எமது படையினர் தமது உயிர், உடல் உறுப்புக்கள், உற்றார் உறவினர்கள் போன்றவற்றைப் பணயம் வைத்துப் போரிடுகின்றனர் என்றார்.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தின்போது படையினர் பலர் உயிரிழந்ததையும், ஆயிரக்கணக்கான படையினர் தமது உடல் உறுப்புக்களை இழந்துள்ளனர் என்பதையும், தென் பகுதியில் ஜே. வி. பி. தீவிரவாதிகளுடனான போரில் பாதுகாப்புப் படையினர் தமது குடும்பத்தினர், உறவினர்கள் போன்றோரை இழந்துள்ளனர் என்பதையும் ஜனாதிபதி பாதுகாப்புப் படையினருக்கு ஞாபகமூட்டியுள்ளார். (க)

ஈரான் போன்ற நாடுகள் இறங்கியுள்ளன. லிபிய ஜனாதிபதி கடாபி தமது ராணுவத் துணைராணுவத் தளபதியை பாக்தாத்திற்கு அனுப்பியுள்ளார். அதே போலவே ஈரானும், ஜோர்டானும் போரை தவிர்க்குமாறு வாஷிங்டனை

## ஈராக்கின் புதிய தேசியக் கொடி

ஈராக்கிய தேசியக் கொடி நேற்றுத் திடீரென மாற்றப்படுவதாக ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் அறிவித்துள்ளார். புதிதாக அமையவுள்ள ஈராக்கிய கொடியில் அல்லாஹோ அக்பர் என்ற கோசமும் இடம்பெறுகின்றது.

அதேவேளை ஈராக்கிய மக்களையும், இஸ்லாமிய உலகத்தையும் புனிதப்போருக்குத் தயாராகும்படியும் சதாம் ஹுசைன் அழைப்பு விடுத்துள்ளார்.

### பொங்கல் தின

ஆர். பி. ஜி. மூலமும் துப்பாக்கிகள் மூலமும் பலத்த தாக்குதல் நடத்தியபடி முன்னேறிய சமயம் விடுதலைப்புலிகள் தற்காப்புக்காக எதிர்த் தாக்குதலை நடத்திய போது கடும் சண்டை மூண்டது.

சுமார் ஒன்றரை மணி நேரம் வரை நடைபெற்ற மோதலின்பின் பலத்த இழப்புகளுடன் இராணுவத்தினர் பின்வாங்கினர்.

அரசின் யுத்த நிறுத்த தினத்தில் இடம்பெற்ற இந்த மோதல் சம்பவம் அரசபடைகள் எதுவும் அரசின் கட்டுப்பாட்டில் இல்லை என்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் கூறிய கூற்றிற்கு சிறிலங்கா இராணுவத்தினர் மற்றுமொரு தடவை செயல்வடிவம் கொடுத்துள்ளனர். (க)

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை அபிராமிப்பிள்ளை

### (தேவி)

கொழும்புத்துறையைச் சேர்ந்த பொன்னுத்துரை அபிராமிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் பொன்னுத்துரை (கட்டட ஒப்பந்தக்காரர்) யின் அன்பு மனைவியும், ராதிகா, வத்சலா (பிரான்ஸ்), பிரபா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15-01-1991 நடைபெற்று தகனக்கிரியைக்காக துண்டிமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மருமகன்

451, பிரதான வீதி,
கொழும்புத்துறை.

(R/1034)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தெரியவருகின்றது.

அதேவேளை பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் பாக்தாத் செல்லும் வாய்ப்பு முற்றாக நிராகரிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்

டன் இம்மாதம் ஒரு திருக்குறள் படிக்கும் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். அன்று திருவள்ளுவர் ஸ்ரிக்கர் வெளியிடப்படும் எனவும் தெரிய வருகின்றது.

## சதாம்ஹுசெனுக்கு ஆதரவாக பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

(இஸ்லாமாபாத்)

அமெரிக்காவிற்கெதிராகவும், ஈராக்கிய அரசுத் தலைவர் சதாம் ஹுசைனுக்கு ஆதரவாகவும் பாகிஸ்தானின் பல நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகின்றன. ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் அணியில் சேர்ந்து கொண்டு போராடத் தொண்டர்கள் தேவை என்று இஸ்லாமிய கட்சியின் தலைவர் மௌலானா நூரினி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்தவாரம் பாக்தாத்தில் நடந்த இஸ்லாமிய மாநாடு சென்று விட்டு கராச்சி திரும்பியுள்ள நூரினி நேற்றுமுதல் தொண்டர்கள் பதிவு நிலையங்கள் திறக்கப்படும் என்றும், சதாம் ஹுசையினை ஆதரிப்போர் பெயரைப்பதிவு செய்து கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாதனின் நினைவஞ்சலி

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் இந்திய இராணுவத்தினரால் அடித்துக்கொலை செய்யப்பட்ட மருதனாமடத்தைச் சேர்ந்த மொட்டை நாதனின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மாலை 6.00மணியளவில் மருதனாமடம் உப அலுவலக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பல பிரமுகர்கள் இதில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

### மனிதநேய

சாரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர். அத்துடன் இம்மாதம் 9 ஆம் திகதி காலமான பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் சடலமும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

பொலிசாரையும், காலஞ்சென்ற பொலிஸ் சார்ஜன்டின் சடலமும் நேற்றுப்பிற்பகல் பருத்தித்துறைக் கடலோரத்தில் வைத்து பாதுகாப்புப்படை அதிகாரிகளிடம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் கையளிக்கப்பட்டது. பொலிஸ் பிரதிநிதி ஒருவரும் சமுகமளித்திருந்தார். பொலிசாரை பலாலியிலிருந்து விமான மார்க்கமாக கொழும்புக்கு எடுத்துச் செல்ல பாதுகாப்புப்படை ஒழுங்குகளை மேற் கொண்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைப் பொறுப்பாளர் திரு. பிறட் தெரிவித்தார்.

யுத்தக் கைதியான மேற்படி பொலிஸ் இரத்தினபுரியைச் சேர்ந்த 54 வயதான நமரட்ண (இல: 5434) ஓட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர். சென்ற தைமாதம் ஓட்டிசுட்டானுக்கு மாற்றலாகியதும் நோயாளியாகக் காணப்பட்ட இவர் ஹேர்ணியா சத்திர சிகிச்சைக்கு சமீபத்தில் உட்பட்டவராகும். இவருக்கு மூன்று பெண்பிள்ளைகளும் ஒரு மகனும் உண்டு.

சடலமாக ஒப்படைக்கப்பட்ட சார்ஜண்ட கருணாரெட்ணா (இல: 1152), வயது சுமார் 50 குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த ஹெற்றிபொல கிராமத்தைச்சேர்ந்தவராவர். இவர் மன்னார் பொலிஸைச் சேர்ந்தவர். மாரடைப்பால் இம் மாதம் ஒன்பதாம் திகதி காலமானார்.

இறந்தவரின் சடலத்தை ஏன் முன்கூட்டியே அனுப்ப முடியவில்லை என்று எமது செய்தியாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கு செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி, "கொழும்பில் அரசாங்கத்துடன் எமது தலைமைச் செயலகம் மூலம் தொடர்பு கொண்டு ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டியிருந்ததால் இந்தக் காலதாமதம்" என்றார்.

கையளிப்பு வைபவம் விடுதலைப் புலிகள் தலைமைச்செயலகத்தில் நேற்றுப் பொங்கலன்று நண்பகல் இடம்பெற்றது. புலிகள் சார்பில் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன் சடலத்தையும், பொலிஸ் நாமரெட்ணாவையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பொறுப்பாளர் திரு. பிறட்டிடம் கையளித்தார். செஞ்சிலுவைச் சங்க வைத்தியர் டாக்டர் டேவிற் மெடிரீஸ்சும் கூட இருந்தார்.

பருத்தித்துறைக் கடலோரத்தில் சடலத்தையும், நாமரெட்ணாவையும் பாதுகாப்புப் படையினிடம் கையளிக்கும் போது விடுதலைப் புலிகள் பிரதிநிதி திரு. இவாவும் கூட இருந்தார்.

...வம் இடம்பெற்றது.

கல்லுண்டாய் வெளியில் 16-10 87 இல் இந்திய இராணுவத்துடனான நேரடிமோதலின்போது இவர் வீரமரணம் அடைந்ததும், இந்திய இராணுவ உயரதிகாரிகள் உட்பட எண்மர் மேற்பட்டோர் இந்த மோதலின்போது கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

### யாழ் இந்துக்கல்லூரி

கோன் விழாவும், நூற்றாண்டு நிறைவு விழாவும் இம்மாதம் 17, 18, 19, 20 ஆம் திகதிகளில் மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளன வீதிகளை அலங்கரிக்குமாறு நூற்றாண்டு விழாக்குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### புலிகளுடன்

தாசாகவும் இதற்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

### கிறிஸ்தவ

கலா மன்ற இயக்குநர் வண. பேராசிரியர் நீ மரிய சேவியர் அடிகள் தலைமையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (21)

### கல்வெட்டையில்

டத்தில் உள்ள கல்வெட்டை என்னும் இடத்தில் வைத்து தமிழ்ப்பொதுமகன் ஒருவரை சுட்டுக்கொன்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சின்னவத்தை இராணுவமுகாமைச்சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் கல்வெட்டை 37 ஆம் கிராமத்தைச்சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கண்ணப்பர் சேதுராம் என்பவரைக் கைதுசெய்து சுட்டுக்கொன்றுள்ளனர். இதனால் இவரது மனைவியும், நான்கு பிள்ளைகளும் அனாதைகளாகியுள்ளனர். (மு)

### எம் மனித நேய

செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், முன்பும் நாம் யுத்தக்கைதிகளை மனிதநேய அடிப்படையில் விடுதலை செய்துள்ளோம். சென்ற ஆண்டு யுத்தக் கைதிகளான 17 பொலிஸாரை நாம் விடுதலைசெய்த சமயம் எமது மனிதாபிமானத்தைப் புரிந்து கொள்ளாத சிறிலங்கா அரசு விமானத் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டது. அரசின் போக்கு எப்படியிருப்பினும் எமது மனிதநேய அணுகுமுறை தொடரும் என்றார்.